We Shine Academy™
guiding you to get through

# தினசரி நடப்புநிகழ்வுகள்

## 21.06.2018

### தமிழக நிகழ்வுகள்



- கிரமப்புற பெண்களின் வாழ்வாதாரத்துக்காக சேவை புரிந்த மதுரையைச் சேர்ந்த **சின்னப்பிள்ளைக்கு** 2018-ஆண்டிற்கான **அவ்வையார் விருது** வழங்கப்பட்டுள்ளது.
    - பெண்கள் மேம்பாடு, சமூக சீர்த்திருத்தம் உள்பட பல்வேறு துறைகளில் சிறப்பாகப் பணியாற்றும் பெண்களுக்கு அவ்வையார் விருது **கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.**



- **மதுரை அருகேயுள்ள தோப்பூரில்** 1600 கோடி மதிப்பீட்டில் 750 படுக்கை வசதிகளுடன் கூடிய நவீன **எய்மஸ்** மருத்துவமனை அமையவுள்ளது.
    - இம்மருத்துவமனையானது **(Pradhan Mantri Swasthya Suraksha Yojana – PMSSY)** என்ற திட்டத்தின் கீழ் அமையவுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் **20 அனைத்து இந்திய மருத்துவ அறிவியல் கழகங்கள்**.(All India Institute for Medical Sciences – AIIMS) அமைக்கப்பட உள்ளது.

**இந்திய நிகழ்வுகள்**




- சுற்றுச் சூழலை மேம்படுத்தும் நோக்கில் மரம் நடும் பள்ளி **மாணவர்களுக்கு தலா ரூ 50 ஊக்கத் தொகை** வழங்கும் திட்டத்தை **ஹரியானா மாநிலம்** அறிமுகப்படுத்தியுள்ளது.



- **சிக்கிம் மாநில அரசின் விளம்பரத் தூதராக** தமிழகத்தைச் சேர்ந்த உலகப் புகழ்பெற்ற இசைமைப்பாளர் **ஏ. ஆர். ரஹ்மான்** நியமிக்கப்பட்டுள்ளார்.




- மேகாலயா மாநிலத்தின் தலைநகர் **சில்லாங்** நகரமானது இந்தியாவின் **100 வது பொலிவுறுநகரமாக** (Smart City) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.



- உலகின் முதல் சர்வதேச மனிதநேயம் தடவியல் **(humanitarian Forensic)** மையம் குஜராத் மாநிலம் **காந்திநகரில்** அமையவுள்ளது

**முக்கிய தினங்கள்**




## சர்வதேச யோகா தினம்- ஜூன்-21

- ஆண்டுதோறும் **ஜூன் 21-ந் தேதி சர்வதேச யோகா** தினமாக கொண்டாடப்படும் என்று கடந்த 2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஐ.நா. பொதுச்சபை அறிவித்தது. முதல்முறையாக 2015 ஆம் ஆண்டு ஜூன் 21 ஆம் தேதி சர்வதேச யோகா தினம் கொண்டாடப்பட்டது.
    - ஜூன் 21,2018 ஆம் தேதி 4-வது சர்வதேச யோக தினம் கொண்டாடப்படுகிறது.
        - இந்த வருடம் **உத்தரகாண்டு மாநிலம் டேராடூன்** இல்

நடைபெறுகிறது.

- இந்த ஆண்டின் கருப்பொருள்: **அமைதிக்கான யோகா.**

**விருதுகள்:**




இந்திய பொலிவுறு நகரங்களுக்கான விருது 2018 ல் புதிய திட்டங்களை செயல்படுத்தியதற்கான **"நகர விருது (City Award) குஜராத் மாநிலத்தின் சூரத்** நகருக்கு வழங்கப்பட்டது.

We Shine Academy™

**உலக நிகழ்வுகள்:**

UNHRC

- ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலில் இருந்து வெளியேறுவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.
  - **United Nations Human Rights Council**
  - 2006-ல் உருவாக்கப்பட்டது

- இதன் தலைமையகம் **ஜெனிவாவில்** (சுவிட்சர்லாந்து) உள்ளது.

We Shine Academy™